செ.வெ.எண்: 24 நாள்: 28.04.2021

கரூர் மாவட்டம்

**அனைத்து சட்ட விதிமுறைகளையும், கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் வகையிலான வழிகாட்டி நெறிமுறைகளையும் பின்பற்றி அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கை நடத்தப்படும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மற்றும் கொரோனா தொற்று பரவாமல் இருக்க கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து வேட்பாளரகள் மற்றும் முகவர்களிடையே விளக்கும் வகையிலான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (28.04.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை 02.05.2021 அன்று நடைபெறவுள்ளது. கரூர் மாவட்டத்தில் உள்ள 134-அரவக்குறிச்சி, 135-கரூர், 136-கிருஷ்ணராயபுரம்(தனி) மற்றும் 137-குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத்தொகுகளுக்கும் வாக்கு எண்ணிக்கை மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது. சட்டமன்ற தொகுதிவாரியாக போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்கு எண்ணும் அறைகளில் டேபிள்கள் போடப்பட்டு, முகர்வர்கள் அமர்வதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளையும், கொரோனா தொற்று பரவாமல் இருக்க அறிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளையும் பின்பற்றி அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

வாக்கு எண்ணும் மையத்திற்கு வருகைதரும் வேட்பாளர்கள், முகவர்கள், வாக்கு எண்ணும் இடமுகவர்கள் ஆகியோர் கொரோனா தடுப்பூசி முதல் டோஸ் எடுத்திருக்க வேண்டும் அல்லது RTPCR பரிசோதனை செய்து தொற்று இல்லை என்று ரிசல்ட் வந்திருக்க வேண்டும். அவ்வாறு உள்ளவர்கள் அதற்கான சான்றிதழை சமர்ப்பித்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். வேட்பாளர்கள் மற்றும் முகவர்களின் வசதிக்கேற்ப சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் 29.04.2021 மற்றும் 30.04.2021 ஆகிய இரண்டு நாட்கள் காலை 10 மணி முதல் சிறப்பு பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு RTPCR பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதனடிப்படையில் அரவக்குறிச்சி தொகுதிக்கு அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம், க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும், கரூர் சட்டமன்றத்தொகுதிக்கு கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கரூர் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கொரோனா தொற்றுக்கான பரிசோதனை சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. அதேபோல, கிருஷ்ணராயபுரம்(தனி) சட்டமன்றத்தொகுதிக்கு கடவூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர் அலுவலகங்களிலும், கிருஷ்ணராயபுரம் ஊராடசி ஒன்றிய அலுவலத்திலும், குளித்தலை சட்டமன்றத்தொகுதிக்கு குளித்தலை சார்ஆட்சியர் அலுவலகம், அண்ணா சமுதாய மன்றம் மற்றும தோகைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் வேட்பாளர்கள், முகவர்கள், வாக்கு எண்ணும் இடமுகவர்கள் ஆகியோருக்கு கொரோனா தொற்றுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பரிசோதனை மேற்கொள்வதற்காக முகவர்கள், வாக்கு எண்ணும் இடமுகவர்கள் ஆகியோர் பட்டியலை வழங்கும் போது 20 சதவீத நபர்களை கூடுதலாக தனி பட்டியலாக வழங்குங்கள். இவர்களுக்கும் சேர்த்து RTPCR பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்படும் நபர்கள் வாக்குஎண்ணும் மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்தகைய சூழலில் கூடுதலாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நெகட்டிவ் ரிசல்ட் வந்த நபர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

வாக்கு எண்ணும் மையத்திற்குள் வரும் நபர்கள் அனைவரும் கண்டிப்பாக முகக்கசவம் அணிந்திருக்க வேண்டும். வாக்கு எண்ணும் அறையில் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். வாக்கு எண்ணும் மையத்திற்குள் என்னென்ன பொருட்களை முகவர்கள் எடுத்துச்செல்லலாம் என்பது குறித்து சம்மந்தப்பட்ட தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். குறிப்பாக பால்பாயிண்ட் பேனா, நோட்புக் உள்ளிட்டவைகளை எடுத்துச்செல்லலாம். மொபைல் போன், கால்குலேட்டர் உள்ளிட்டவைகள் எடுத்துச்செல்ல அனுமதி இல்லை.

வாக்கு எண்ணும் மையத்தில் அனைத்து நிகழ்வுகள் வீடியோ பதிவு செய்யப்படும். அனைத்து வாக்கு எண்ணும் அறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணும் அறைக்கு எடுத்து வரும் வழிகள் அனைத்திலும் சி.சி.டி.வி கேமரா பொருத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பட்டு வருகின்றது.

வாக்கு எண்ணும் மையத்திற்குள் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் பார்வையாளர்களின் வாகனங்களை தவிர வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள், பிற அலுவலர்களின் வாகனங்கள் அனுமதிக்கப்படாது. வாகனங்களை நிறுத்துவதற்கென்று வாக்கு எண்ணும் மையத்திற்கு வெளியில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வானங்களை நிறுத்திக்கொள்ள வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையின் ஓரத்தில் வாகனங்களை நிறுத்தக்கூடாது.

வெற்றிபெறும் வேட்பாளர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வெற்றிக்கான சான்றிதழை வழங்கும்போது வேட்பாளருடன் இரண்டு நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகு வெற்றிக்கொண்டாட்டங்கள் ஏதும் நடத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதை அரசியல் கட்சிகள் முறையாக கடைபிடிக்க வேண்டும்.

கொரோனா தொற்று இரண்டாம் அலை வேகமாக பரவி வருவதால் நம்மால் யாருக்கும் தொற்று பரவிவிடக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் அனைவரும் வழிகாட்டி நெறிமுறைகளை முறையாகப்பின்பற்ற வேண்டும். கரூர் மாவட்டத்தின் வாக்கு எண்ணிக்கையினை பாதுகாப்பான சூழலில், அமைதியான முறையில் நடத்தி முடிக்க அனைவரது முழு ஒத்துழைப்பினையும் அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.லியாகத், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.ஷாஜகான், வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு) திரு.பிரபு, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன், கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் கரூர் வருவாய் கோட்டாச்சியர் திரு. என்.எஸ்.பாலசுப்பிரமணியன், குளித்தலை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் திரு.ஷே.ஷேக்அப்துல்ரகமான்,இஆப., அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் கலால் துறை உதவி ஆணையர் திரு.ஜி.தவச்செல்வம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கே.தட்சிணாமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**